

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக முதன்மை செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. உள்பட மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாநில நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.கழக ஆட்சியில் விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம்!

உதயநிதி ஸ்டாலினின் வலுவான அடித்தளத்தால் தமிழ்நாட்டு வீரர்கள் சர்வதேச அளவில் வெற்றி!

ஆசிய சர்வதேசப் போட்டியில் சாதனை படைத்த வீராங்கனை வித்யா ராமராஜ் பேட்டி!

சென்னை, அக். 2 -

சர்வதேச தடகளப் போட்டிகளில் இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் தொடர்ந்து நிலைநிறுத்தி வருபவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த நட்சத்திர வீராங்கனை வித்யா ராம்ராஜ். களத்தில் அடுத்தடுத்துப் பல சாதனைகளையும் பதக்கங்களையும் குவித்து வரும் இவர், தனது இந்த அபார வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பின்னால் இருந்த ஆதரவு குறித்து வெளிப்படையாகப் பேசியுள்ளார்.

குறிப்பாக, கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில்விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த உதயநிதி ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களும், விளையாட்டுத் துறைக்கு அவர் அளித்த அதீத முக்கி யத்துவமும்தான் தங்களைப் போன்ற வீரர்களின் வாழ்க்கையையே தலைகீழாக மாற்றியது என்று வித்யா ராம் ராஜ் நெகிழ்ச்சியுடன் பாராட்டி யுள்ளார்.

"உதயநிதி சார் வந்த பிறகு எல்லாமே மாறியது":

வித்யா ராம்ராஜ் தடகளத் தில் தமிழ்நாடு எப்போதும் நல்ல நிலையில் இருந்தபோதி லும், முந்தைய தி.மு.க. ஆட்சி யில் உதயநிதி ஸ்டாலின் விளை யாட்டுத் துறை அமைச்




சராகப் பொறுப்பேற்ற பிறகே வீரர்களுக்குக் கிடைத்த ஆத ரவு பல மடங்கு உயர்ந்ததாக வித்யா ராம்ராஜ் குறிப்பி ட்டுள் ளார். இதுகுறித்து சமீபத்தில் அவர் பேசுகையில்: "மற்ற விளையாட்டுகளுடன் ஒப்பி டும்போது, தடகளத்தில் (Athlet ics) தேசிய அளவிலும், மாநி லங்களுக்கு இடையேயான போட்டிகளிலும் நாம் எப்போ துமே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம். ஆனால், எப் போது உதயநிதி சார் விளை யாட்டுத் துறைக்கு வந்தாரோ, அப்போதிலிருந்து விளை யாட் டுத் துறைக்குக் கிடைத்த ஆத ரவு மிகப் பெரிய அளவில் அதி கரித்தது. ஏனென்றால், அவர் வந்த பிறகு விளையாட்டுத் துறையில் ஒவ்வொன்றும் முன்னே றியது; எண்ணற்ற புதிய திட்டங்களைக் கொண்டு வந்தார். நான் ஆசிய விளையாட் டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றபோது எனக்குப் பல லட்ச ரூபாய் ரொக்கப் பரிசுகள் கிடைத்தன; கிட்டத்தட்ட ரூ.80 லட்சம் பரிசுத் தொகை யாக வழங்கப்பட்டது. அந்த அள வுக்கு அவர்கள் விளையாட்டு வீரர்களை முழுமனதோடு ஆதரித்தார்கள்" என்று தெரி வித்துள்ளார்.

எலைட் திட்டம் தந்த நிம் மதி விளையாட்டு வீரர்கள் சர் வதேச அளவில் போட்டியிட வேண்டும் என்றால் உயர்தர காலணிகள், சத்தான உணவு, உடற்பயிற்சிக் கருவிகள் மற் றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் அத்தியாவசியம். எளிய பின்பு லத்தில் இருந்து வரும் விளை யாட்டு வீரர்களுக்கு இது மிகப் பெரிய சுமையாக இருந்து வந் தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் உதய நிதி ஸ்டாலின் தீவிரப்படுத்திய 'எலைட் திட்டம்' (Elite Scheme) தங்களுக்கு எவ்வாறு கைகொ டுத்தது என்பதை வித்யா ராம்ராஜ் விளக்கியுள்ளார்: ஆண்டுக்கு ரூ.30 லட்சம் உதவித்தொகை: எலைட் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட முன்னணி வீரர் களுக்கு ஆண்டுதோறும் ரூ.30 லட்சம் வரை அரசு சார் பில் பயிற்சி செலவுகளுக்காக வழங்கப்படுகிறது.

வித்யா ராம்ராஜ் குறி ப்பிடு கையில், "இப்போது விளை யாட்டுக்குத் தேவையான எந் தப் பொருளை வாங்கினாலும், அதற்கான ரசீதை (Bill) ஒரு வாரத்திற்குள் சமர்ப்பித்தால் போதும். அடுத்த 30 நாட்க ளுக்குள் அந்த முழுப் பண மும் எங்கள் வங்கிக் கணக்கிற் குத் திருப்பித் தரப்படுகிறது. இதனால் வீரர்களுக்குப் பணத் தட்டுப்பாடு என்ற பேச்சே இருப்பதில்லை" எனக் கூறியுள்ளார்.

பயிற்சிக்குத் தேவையான உபகரணங்களை எந்தவிதத் தயக்கமும் இன்றி வாங்க முடி கிறது என்பதும், பணப் பற்றாக் குறை குறித்த கவலைகள் ஏது மின்றி போட்டிகளில் மட்டுமே முழு கவனத்தையும் செலுத்த முடிகிறது என்பதும் வீரர்க ளுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் ஆகும். "இந்தி யாவில் எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு திட்டம் இல்லை" தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையம் (SDAT) மூலம் செயல்படுத்தப்பட்ட இத் தகைய திட்டங் களை நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டு வித்யா ராம்ராஜ் பெருமிதம் தெரிவித்துள்ளார்: உதயநிதி சார் அந்த அளவிற்கு தமிழ் நாட்டின் விளை யாட்டுத் துறையை உயர்த்தியுள்ளார். மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட் டுப் பார்த்தால், நமது தமிழ் நாடு மிகப்பெரிய வளர்ச்சியை அடைந் துள்ளது. இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் விளையாட்டு வீரர்களுக்கு இவ்வளவு சிறப் பான உதவிக ளைச் செய்யும் திட்டங்கள் கிடையாது. வீரர்களின் திற மைகளை முன்கூட்டியே கண் டறிந்து, அவர்களுக்குத் தேவையான நிதி, நவீன மைதானங்கள், விளை யாட்டு அறிவியல் மையங்கள் மற் றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளை வழங்கி உதய நிதி ஸ்டாலின் அமைத்துக் கொடுத்த அந்த வலுவான அடித்தளமே, இன்று தமிழ் நாட்டு வீரர்கள் சர்வதேச மேடைகளில் தலைநிமிர்ந்து நிற்கக் காரணமாக அமைந் துள்ளது. விளையாட்டு வீரர்க ளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவர்களுக்குத் தேவையானதை உடனுக்கு டன் செய்து கொடுத்ததால் தான் தங்களால் தடைகளைத் தாண்டி சாதனை படைக்க முடிந்தது என்பதை வித்யா ராம்ராஜின் இந்த நெகிழ்ச்சி யான வார்த்தைகள் மெய்ப்பித் துள்ளன.

அக்டோபரும் செவாலியரும்!



ஓராயிரம்
பாவங்களை
ஓர் முகத்தில்
காட்டிய

உலகின்
ஆகச்
சிறந்த

கலைஞனின்
அவதார
திருநாள்

அக்டோபர் -1

முகம் மட்டுமே
நடிக்கும்
நடிகர்களுக்கு
மத்தியில்

நகமும்
நடித்த
நடிகர் திலகம்

"நா" பேசும்
வசனத்தை
நடையால்
பேசிய
நாயகன்..

சங்கத்தமிழ்
பூமிக்கு
சாயங்கால
சந்தோசத்தை

நெடுங்காலம்
அள்ளித்தந்த
நிகரில்லா
நடிகன்..

கப்பலோட்டிய
தமிழனை
கண்முன்னே
நிறுத்திய
கலைஞன்..

வீரபாண்டிய
கட்டபொம்மனை
விழிமேடையில்
உலவ விட்ட

ஒப்பில்லா
கலைப்
பொக்கிஷம்..
திருவருட் செல்வரை
திரையில்
கொண்டு வந்து..

கவிபாடிக்
களித்த
பாரதிக்கும்

திரைவடிவம்
தந்த
தீந்தமிழ்
நாயகன்..

கந்தனாக
கர்ணனாக
காளிதாசனாக

காவியத்து
நாயகர்களாக
கடவுளர்
வடிவமாக

ஆணாக
பெண்ணாக
அர்த்தநாரியாக

இப்படி...

ஆயிரமாயிரம்
அவதாரங்களால்

பார் போற்றிய
நடிப்பின்
பல்கலைக்கழகம்..

செந்தமிழ்
பூமிக்கு
செவாலியே
வென்று வந்த

சிங்கத்தமிழன்
சிம்மக்
குரலோன்..

கலைவானில்
ஒளிவீசும்

காலத்தால்
அழியாத
சாஸ்வத
நட்சத்திரம்..

சினிமாவை
சாடிய
பெரியாரிடமே

சிவாஜி
பட்டம் பெற்ற

கணேசன் எனும்
கலைத்தாயின்
மூத்த மகன்...

பாசமலர்
பொழிந்து

பாரதவிலாஸ்
படைத்த

தேசியக்
கலைஞன்..

உயர்ந்த மனிதன்
உத்தம
புத்திரன் என

விழிபேசும்
அந்த
வீரத்திற்கு

இமையும்
நடிக்கும்
இமயத்திற்கு

இன்று
பிறந்தநாள்...

'சிவாஜி
செத்தது
போலவே
நடிக்கிறார்'

இப்படி
அந்த
மகா கலைஞனின்

மரண
ஊர்வலம்
பார்த்து

மழலை ஒன்று
சொன்னதாம்

ஆம்
அசலை கூட
நடிப்பென்று

ஆச்சரியம்
கொள்ள வைத்த

அந்த
அமரத்துவமிக்க
கலைஞனுக்கு
பிறந்தநாள்

வணங்குவோம்
வாழ்த்துவோம்



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வீரபாண்டி ஆ. இராஜா
அக்டோபர் 2 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா" என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

